From-39

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No.76/16

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : Prammanandham | Father/Husband Name:Dhanushkodi | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | :13.02.2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2018.

**(எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர் இல்லை. சாட்சி சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.)**

**முதல் விசாரணை: (அரசுதரப்பில்)**

நான் தற்போது தூத்துக்குடியில் குடியிருந்துவருகிறேன். நான் டிவிடி பிரைவேட் சிப்பிங் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் உரிமையாளராக இருந்து சிப்பிங் சர்வீஸ் தொழில் செய்து வருகிறேன். இவ்வழக்கில் வாகன விபத்தில் இறந்துபோன தனவதி என்பவர் எனது மனைவியின் உடன் பிறந்த சகோதரி ஆவார். இறந்துபோன மாரிமுத்து தனவதியின் கணவர் ஆவார். விபத்தில் இறந்துபோன பிரியஷா, பிரதீப், என்னுடைய பேரன் பேத்திகள் ஆவார், விஜயகுமார் ஒட்டுனர் ஆவார். சுமார் 10 வருடத்திற்கு முன்பு 2 கார்களில் நானும், எனது மனைவியும் ஒரு காரிலும், மற்றொரு காரில் வழக்கில் இறந்துபோனவர்கள் பயணம் செய்து சென்னக்கு சென்று கொண்டிருந்தோம். மேலூருக்கும் மதுரைக்கும் இடையில் உள்ள பஞ்சாபி தாபாவில் நானும் எனது மனைவியும் காரை நிறுத்தி உணவு சாப்பிட ஹோட்டலுக்கு சென்றோம். அப்போது காலை சுமார் 9 மணி இருக்கும்.

எங்களுக்கு காருக்கு பின்னால் வந்த மற்றொரு காரில் வந்த இறந்துபோனவர்களிடம் நான் போன்மூலமாக நான் பஞ்சாபி தாபாவில் சாப்பிட இருக்கிறோம் நீங்களும் அங்கு வந்துவிடுங்கள் என்று சொன்னேன். நான் இறந்துபோன

பிரியஷா, பிரதீப்பிரியஷா, பிரதீப்மாரிமுத்துவிடம் போனில் சாப்பிட வருவதற்கு சொல்லிவிட்டு காத்துக்கொண்டு இருந்தோம். வெகுநேராமாகியும் அவர்கள் நான் சொன்ன ஹோட்டலுக்கு வரவில்லை.. அதனால் நானும், எனது மனைவியும் எங்களது காரில் அவர்கள் வெகுநேரமாகியும் வரவில்லை என்று அவர்களை தேடி பார்க்க சென்றோம். தேடிச்சென்ற போது ஒத்தக்கடைக்கு பிரியும் சாலையில் விபத்து ஏற்பட்டு இருந்ததை பார்த்தோம். இவ்வழக்கில் இறந்துபோன மாரிமுத்து, மனைவி மற்றும் குழந்தைகள் சிற்றுந்து காரில் மோதி விபத்துகுள்ளானதை பார்த்தேன்.

நான் பார்த்தபோது ஏற்கனவே அங்கு போலீசார் வந்திருந்தனர். விபத்தில் சிக்கியிருந்த வாகனத்தை மீட்க ஜேசிபியும் வந்திருந்தது. நான் அங்கு விபத்து நடந்த இடத்திற்கு சென்று பார்த்தபோது அங்கிருந்த போலீசார் என்னிடம் நீங்கள் யார் என்று என்னிடம் விசாரித்தார்கள். நான் விபத்தில் இறந்துபோனவர்கள் எனது உறவினர் என்று தகவல் சொன்னேன். எங்களுக்கு பின்னால் வந்த விபத்துக்குள்ளான கார் வந்துகொண்டிருந்தபோது ஒத்தக்கடை சாலை பிரிவில் விபத்து ஏற்படுத்திய சிற்றுந்து எந்தவித சிக்னலும் இல்லாமல் சட்டென திரும்பியது. திரும்பிய அந்த சிற்றுந்து கார் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது என நான் தெரிந்துகொண்டேன். சிற்றுந்தின் பதிவு எண் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. அப்போது சிற்றுந்து ஓட்டிய பஸ் டிரைவர், மற்றும் அங்கிருந்து கூடியிருந்தவர்கள் தகராறில் ஈடுபட்டாவர்கள். அப்போது சிற்றுந்து டிரைவரை பார்த்தேன். சுமார் 10 வருடம் ஆகிவிட்டதால் அந்த டிரைவரை ஞாபகம் இல்லை. விபத்து நடந்து நீண்ட காலம் ஆகிவிட்டதால் ஆஜர் எதிரி எனக்கு ஞாபகம் இல்லை. விபத்தில் படுகாயமடைந்த பிரியஷா, பிரதீப் ஆகிய இருவர்கள் உயிரும் ஆபத்தான நிலையில் இருந்ததால் அவர்களை மதுரை அப்போலோவிற்கு கொண்டு சென்றுவிட்டார்கள், மற்றவர்கள் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதால் அவர்களை மதுரை அரசு மருத்துவனைக்கு கொண்டு சென்றுவிட்டார்கள். அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்த பிரியஷா, பிரதீப் ஆகிய இருவரும் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார்கள். அது சம்மந்தமாக விபத்து ஏற்படுத்திய சிற்றுந்து ஓட்டுனர் மீது ஒத்தக்கடை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகாரில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். **மேற்படி புகாரானது அ.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரனை செய்தார்கள்.

**குறுக்குவிசாரணை(எதிரிதரப்பில்).**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர் இல்லை. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர் இல்லை. குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.